1994 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 439, திரு. கோ. காளன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

439--

அம்பத்தூர் நகராட்சியில் பாதாளச் சாக்கடை அமைத்தல்

21117*--திரு. கோ. காளன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அம்பத்தூர் நகராட்சிப் பகுதியில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அம்பத்தூர் நகராட்சிப் பகுதிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைப்பது குறித்த திட்டம் ஏதும் தற்போதைக்கு பரிசீலனையில் இல்லை.

திரு. கோ. காளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அம்பத்தூர் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்கக்கூடிய திட்டம் ஏதும் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் 2, 3, மாதங்களுக்கு முன்பாக தமிழக அரசு கெசட் நோட்டிபிகேஷனிலே, அம்பத்தூர் நகராட்சி, வளசரவாக்கம், போரூர் ஆகிய பகுதிகளுக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று ஒரு அறிவிப்பு வந்திருக்கிறது. சமீபத்தில் நடந்த செங்கை–எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கூட்டத்திலேகூட இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அம்பத்தூர் நகராட்சி என்பது சென்னை மாநகரத்தை ஒட்டிய புறநகர்ப் பகுதியாகும். அதோடு மட்டுமல்ல, அது தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி. தொழிற்சாலைக் கழிவு நீர்களும், சாக்கடை நீர்களும் அங்கங்கே தேங்கி கிணற்று நீர்கள் எல்லாம் விரைவிலே மாசுபட்டு விடுகின்றன. இதனால் மக்கள் குடிநீருக்கு மிகவும் கஷ்டப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. அரசு ஏற்கனவே உத்தரவு கொடுத்து இருக்கிறது. இப்போது அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே இந்தத் திட்டத்தை விரைவுபடுத்தி நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படவேண்டும் என்று சொன்னால், நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொன்னால், அங்கு முறையான, முழுமையான குடிநீர்த் திட்டம் செயலிலே இருக்க வேண்டும். ஆனால் அம்பத்தூர் நகராட்சிக்கு குறைந்த நிலையிலேதான் குடிநீர் வழங்குகிற திட்டம் தற்போது செயலிலே இருந்துகொண்டிருக்கிறது. அப்படி பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொன்னால், பல கோடி ரூபாய்கள் தேவைப்படுகின்றன. ஆனால் அம்பத்தூர் நகராட்சி தன்னுடைய சொந்த நிதியிலிருந்து அப்படிப்பட்ட ஒரு பெரிய திட்டத்தைச் செயல்படுத்த முடியாது. இப்படிப்பட்ட நிலை இருக்கின்ற காரணத்தினாலே அங்கே தற்போதைக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் இல்லை. ஆனால் தெலுங்கு கங்கைத் திட்டம் முடிவுற்ற பிறகு அம்பத்தூர் நகருக்கும் கிருஷ்ணா நதி நீரைக் கொணர வேண்டுமென்று இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணையின் பேரில் இன்றைக்கு செங்குன்றத்திலிருந்து போரூர் வரை குழாய்கள் நீட்டிப்புப் பணிகள் சுமார் 41 கோடி ரூபாயிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலே 5-வது கட்டமாக அம்பத்தூர் நகருக்கும், ஆவடி நகருக்கும் கிளைக் குழாய்கள் பதிக்கின்ற பணிகள் இன்றைக்கு ஆரம்பிக்கப்பட்டு விட்டன. ஆகவே கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் அங்கே கொணரப்பட்ட பிறகு இந்த பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 440, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

440--

புவனகிரி ஒன்றியத்தில் ஆதிதிராவிட மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்தல்

*22106--**செல்வி கோ. மல்லிகா:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புவனகிரி ஒன்றியம், மஞ்சக்கொல்லை ஆதிதிராவிட மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?